## August 3, 2025 - *தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்*

1. வங்கதேசத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கிய மாணவர் போராட்டத்துக்கு அரசியல் சாசன அங்கீகாரம் அளிக்கும் வகையில், அது தொடர்பான 'ஜூலை பிரகடனம்' வரும் 5-ஆம் தேதி வெளியிடப்படும் என்று அந்தநாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் அறிவித்துள்ளார்.
2. இந்திய விமானப்படைக்கு 56 சி-295 ரக ராணுவ போக்குவரத்து விமானங்களை கொள்முதல் செய்வதற்காக ஸ்பெயினில் உள்ள விமான பாதுகாப்பு மற்றும் விண்வெளி மையத்துடன் இந்தியா கடந்த 2021, செப்டம்பரில் ஒப்பந்த மிட்டது. தற்போது ஸ்பெயினிடமிருந்து 16-ஆவது சி-295 ரக ராணுவ விமானத்தை பெற்றது இந்தியா.
3. இந்திய விமானப் படையின் ஆவ்ரோ போர் விமானத்துக்கு மாற்றாக களமிறக்கப்படவுள்ள சி-295 ரக ராணுவ விமானம் 5 முதல் 10 டன் எடையுடைய பொருள்களை சுமந்து செல்லும் வகையில் நவீன தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
4. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. உறுப்பு மாற்று சிகிச்சைகளை திறம்பட மேற்கொண்டதில் நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழகம்.
5. தமிழகத்தில் உறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்த 2023 செப். 23-ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.
6. தேசியக்கொடியை வடிவ மைத்த ஆந்திர மாநிலத்தைச்சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பிங்காலி வெங்கையாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு புகழஞ்சலி செலுத்தினார்.
7. தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள 'அம்ருத் உத்யான்' என்ற பெயரிலான மலர்த் தோட்டம் ஆக. 16 முதல் செப். 14 வரை பொதுமக்கள் பார் வையிடுவதற்காக திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
8. மீன் உற்பத்தியில் உலகின் இரண் டாவது பெரியநாடாக உள்ள இந்தியா, கடந்த 10 ஆண்டுகளில் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியில் 103 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. உள்நாட்டு நீர்நிலைகளைப் பொருத்தவரை, மீன் உற்பத்தியில் 143 சதவீத வளர்ச்சி பதிவாகியுள்ளது.

9. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
   i. முகமது யூனுஸ் - வங்காளதேசத்தின் தலைமை ஆலோசகர்
   ii. டிமிட்ரி மெட்வெடேவ் - ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவர்
   iii. ஸ்பெயின் பிரதமர் - பெட்ரோ சான்செஸ்